

# 5-ஸ்டெப் சர்குலர் டாப்

*இந்த வெகு அழகான 5-ஸ்டெப் சர்குலர் டாப் அணிவதற்கு ஈசியானது, கோடைக்கும் ரொம்ப பொருத்தமானது.*

## தேவையான பொருள்கள்

60” அகலத்துடன் 2.5 மீட்டர் துணி
5-ஸ்டெப் டாப் டெம்ப்ளேட்
மார்க்கர்
ஸ்கேல்
கத்தரிக்கோல்
பின்கள்
உஷா ஜனோம் ரோல்ட் ஹெம் ஃபூட்
மற்றும் நூல்

முதல்ல, துணிய பாதியா மடிக்கவும் அப்புறம் வீடியோல காட்டியிருக்க மாதிரி ரெண்டா மடிக்கவும்

## ஸ்டெப் 1 டெம்ப்ளேட் மார்க்கிங் செய்தல் வெட்டுதல்

www.ushasew.com லிருந்து டவுன்லோட் செய்யப்பட்ட டெம்ப்ளேட்-ஐ இதில் வைக்கணும். டெம்ப்ளேட்-ன் நேர் விளிம்பு துணி மடிப்பின் மேல் இருக்கிறதை உறுதி செய்துக்கணும். இதை சரியா வைச்சப்புறம் டெம்ப்ளேட்-ஐ பின் செய்யணும்.


துணியில் டெம்ப்ளேட்-ஐ மார்க்கர் கொண்டு ட்ரேஸ் செய்யணும், கை நடுக்கம் இல்லாமல் இதை செய்யணும் பின்களை எடுத்துட்டு டெம்ப்ளேட்-ஐ நீக்கிறணும்.

இப்போ வரைந்த மார்க்கிங்குகளை வெட்டணும். இதை கவனமாவும் துல்லியமாவும் செய்யணும். இப்ப ஸ்டெப் 1 முடிஞ்சுது.
ஸ்டெப் 2க்கு முன்னேறுவதற்கு முன்னால, இந்தப் பேட்டனை நல்லா தெரிஞ்சுக்கணும். ரெட்டை மடிப்பை விரித்து, டெம்ப்ளேட்-ன் அளவுகள பார்க்கலாம். இதுதான் உங்கள் டாப்-போட நெக்லைன், இவைதான் பக்கங்களா இருக்கும். இப்போ நாம் நெக்லைன், பக்கங்கள்ல வேலைய தொடங்கலாம்

## ஸ்டெப் 2 நெக்லைனை முடித்தல்


ஸ்டெப் 2க்கு வழக்கமான பிரஸ்ஸர் ஃபூட்-அ நீக்கிட்டு ரோல்ட் ஹெம் ஃபூட்-அ மாத்துங்க. சரியான இடத்துல அதை பொருத்தி, பிரஸ்ஸர் ஃபூட்-ல நெக்லைனோட முனையை அலைன் பண்ணுங்க. தட்டையா ஹெம் பண்ண வீடியோல காட்டி இருக்கிற மாதிரி ஒரு கால் அங்குலத்துக்கு இங்க மடிக்கணும். பேட்டர்ன் செலக்டர் டயலை A க்கு வைக்க மறக்காதீங்க, இது நேர் தையல், அப்புறம் தையல் நீள டயலை 2.5 ஆ அமைக்கணும்.



















வீடியோல காட்டி இருக்கற மாதிரி ஃபிளாட் ஹெம்மிங்க தொடங்கிருங்க, தொடர்ந்து ஹெம் பண்றப்ப உள்பக்கமா மடிச்சிட்டே போங்க. அப்படிதான்! சரியான பாதைல போயிட்டு இருக்கீங்க. உங்க நெக்லைன் பாக்க இப்படி இருக்கணும்

## ஸ்டெப் 3 ஹெம்லைனை முடித்தல்

ஃபிளாட் ஹெம்மிங்கால துணியோட பக்கங்களுக்கு ஒரு நேர்த்தியான ஃபினிஷிங் கிடைக்கும். நெக்லைனோட அதே செயல்பாட்டை மறுபடியும் செய்யணும், துணிய ஒரு கால் அங்குலத்துக்கு மடிச்சிகிட்டு தைக்க ஆரம்பிச்சிருங்க. துணி முழுவதும் தைப்போம், இது ட்ரிக்கியா இருக்கலாம் ஆனா உங்களால இதைச் செய்ய முடியும். அவ்வளவுதான் முடிஞ்சிருச்சு. உபரியா உள்ள நூலை கட் பண்ணிருங்க. பக்கங்கள்ல அப்புறம் நெக்லைன்ல உள்ள தையல் பாக்க இந்த மாதிரி இருக்கணும்

## ஸ்டெப் 4க்கு கைகளுக்கான ஹோல்சை உருவாக்க பக்கங்கள தைக்கணும்.

இதைச் செய்ய நமக்கு டெம்ப்ளேட் தேவை, அந்த டாப்-ன் ஒரு பக்கத்தில டெம்ப்ளேட்டை வையுங்க. நடுவுல நேர்க்கோடு வரையப்பட்டு இருக்கறதை பார்த்தா, இதுல காட்டியுள்ளபடி துணில பாயின்ட்டுகளை உருவாக்க அந்த கோட்டை பயன்டுத்திக்கலாம். இப்ப, டெம்ப்ளேட்ட புரட்டி, இதே செயல்முறைய இன்னொரு பாதியிலேயும் மறுபடியும் செய்யணும்.

இதுதான் உங்க மார்கிங்குகள். தைக்க சுலபமா இருக்க, ரெண்டு பக்கங்களையும் ஸ்கேலை வெச்சிட்டு புள்ளிகளை ஒன்னு சேர்க்கணும். அது நேர்க் கோடா இருக்கறத உறுதிசெய்துக்கணும். துணிய சரியான இடத்தில் பொருத்த இந்த கோடுகள்ல மணிகோர்த்த பின்களை பயன்படுத்தலாம். இப்ப நாம பின் பண்ணப்பட்ட பகுதிய ஒன்னா இணைப்போம். இதைச் செய்ய, ஹெம்மிகுக்கு பயன்படுத்தப்படற பிரஸ்ஸர் ஃபூட்-க்கு பதிலா வழக்கமான பிரஸ்ஸர் ஃபூட்-அ மாத்தணும், தையல் அகலத்தை 5-ஆ அமைக்கணும். இதைச் செய்து முடிச்ச பிறகு, பிரஸ்ஸர் ஃபூட்டோட மார்க் செய்யப்பட்ட கோட்டை அலைன் பண்ணிகிட்டு தைக்கத் தொடங்கிருங்க. ஒருசில தையல் போட்டப்புறம் ரிவர்ஸ் தையலுக்கு ரிவர்ஸ் ஸ்ட்டிச் செலக்டாரை பயன்படுத்தணும், இது நாம தையல் பிரிஞ்சு போயிறாம சரியான இடத்தில இருக்கறதை உறுதிசெய்யும். அந்த கோடு முடியறவரை தொடர்ந்து தையுங்க. நூல் கட்டரால நூலை துண்டிச்சிருங்க, கொஞ்சம் நேரம் தையலை சரிபார்க்க செலவிடுங்க, அது பாக்க இந்த மாதிரி இருக்கணும். திருப்தியான பிறகு, இன்னொரு லைனுக்கு இதே செயல்முறைய மறுபடியும் செய்யுங்க.

## ஸ்டெப் 5 நெக்லைனை அழகுபடுத்துதல்

இதுல நாம நெக்லைனை அழகுபடுத்தலாம், வீடியோல காட்டி இருக்கற மாதிரி நெக்லைனை அழகுபடுத்த நாம உஷா 3வே கோர்டிங் மற்றும் பீடிங்க ஃபுட்-அ பயன்படுத்தணும். இதுல கத்துக்கொடுக்கறதை பார்க்க www.ushasew.comங்கற எங்கள் வலைதளத்துக்கு வாங்க.

இது பார்க்க எவ்வளவு ரொம்ப அழகா இருக்குபாத்தீங்களா? இந்த 5-ஸ்டெப் டாப்-அ பொருத்தமான ஹெட்பேண்ட், தொங்கட்டானோட சேர்த்து போட்டுகிட்டா உங்களுக்கு செம்ம லுக் கிடைக்கும். பிரஞ்ச்லேந்து நண்பர்களோட ஷாப்பிங் போறதுவரை எதுன்னாலும் இந்த டாப் உங்க ஸ்டைல உசத்திக் காட்டும்.